சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – பணியாளர் தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. சக்கரபாணி என்பவரின் மகன் திரு. ச. மதிஒளி என்பவர் கருணை அடிப்படையில் தட்டச்சராக நியமிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந4) துறை

அரசு ஆணை(3D)எண்:4 நாள்.18.02.2014.

விஜய மாசி திங்கள் 6 ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2045.

படிக்கப்பட்டது:–

1. ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அவர்களின் கடித எண்.இ3/5191/02, நாள்.06.01.2012.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.3998/சிடி–ஏ2/2012, நாள்.08.04.2013.

••••••

ஆணை:–

மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. சக்கரபாணி என்பவரது மகன் திரு. ச. மதிஒளி என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம், நாகல்கேணி அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் தட்டச்சராக 22.05.2008 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும் இவரது பணியினை முறையாக வரன்முறை செய்து ஆணையிடும்படியும், தனியரது தந்தை திரு. து. சக்கரபாணி என்பவர் காஞ்சிபுரம் அரசு ஆதிதிராவிடர் நல விடுதியில் காப்பாளராகப் பணிபுரிந்தபோது 12.04.2001 அன்று காலமானார் என்றும், அவர் தகுதி காண் பருவம் முடித்தவர் என்றும் எனவே, கருணை அடிப்படையில் அவரது மகன் திரு. ச. மதிஒளி என்பவர் பணிவாய்ப்பு கேட்டு முறையாக விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள்.22.06.1978 என்றும், அவர் உயர் நிலைக் கல்வி பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், ஆதிதிராவிடர் நல ஆணையர் தெரிவித்து தனியரின் பணியினை இவர் பணியில் சேர்ந்த நாளான 22.05.2008 முற்பகல் முதல் தட்டச்சர் நிலையில் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டப்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், ஆதிதிராவிடர் நலத்துறையில் தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட திரு. ச. மதிஒளி என்பவரை அவர் பணியேற்ற நாளான 22.05.2008 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி) பிற்பகுதியின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவுக் கோரப்பட்டது.

த.தி.பா.

3. மேலே 2 –ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. சக்கரபாணி என்பவரின் மகன் திரு. ச. மதிஒளி என்பவரை கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் தட்டச்சர் பதவியில் 22.05.2008 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்வதற்கு அரசாணை(நிலை)எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.03.08.1977 –ல் பத்தி 6–க்கு விலக்களிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தமது இசைவினை வழங்கியுள்ளது.

4. தனியர் திரு. ச. மதிஒளி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்த நாளில்(06.02.2002) உரிய கல்வித் தகுதியை நிறைவு செய்துள்ளார். எனவே, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அளித்துள்ள இசைவின் நிபந்தனையில் தெரிவித்தவாறு தனியர் பொருட்டு அரசு ஆணை(நிலை)எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.03.08.1977 பத்தி 6–க்கு விலக்களிக்க வேண்டிய தேவையில்லை என தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை தெரிவித்துள்ளது. மேலும், அவ்வரசாணையின் பத்தி 3 மற்றும் 4–ல் குறிப்பிட்டுள்ள ஆணையின் அடிப்படையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல விடுதியில் காப்பாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும்போது இறந்த திரு.சக்கரபாணி என்பவரின் மகன் திரு. ச. மதிஒளி, என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஆதிதிராவிடர் நலத்துறையில் காஞ்சிபுரம் மாவட்டம், நாகல்கேணி அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் தட்டச்சர் பதவியில் அவர் பணியேற்ற நாளான 22.05.2008 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு தனியர் தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் முடிவெடுத்து அதன்படி அன்னாரது பணியை 22.05.2008 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு முறையாக பணி வரன்முறை செய்யப்படுவதால் தகுதியுள்ள ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அவைகளை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

5. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் ஒப்புதலுடன் (அ.சா.கு.எண்.2678/ட்டி1/2014–1, நாள்.13.02.2014) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கண்ணகி பாக்கியநாதன்.**
அரசு செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், ஆதிதிராவிடர் நலன், சென்னை–5.
திரு. ச. மதிஒளி, தட்டச்சர்,
(இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் வழியாக)
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–1.
நகல்:–
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்( T-1)துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மே.கு.எண்: இ3/5191/02 நாள்: 03.2014
திரு. ச. மதிஒளி தட்டச்சர் என்பவருக்கு அனுப்பலாகிறது.
பெறுநர்:
திரு. ச. மதிஒளி, தட்டச்சர்,
அ.ஆ.தி.மே.நி.பள்ளி,
ஈஞ்சம்பாக்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம்: 613502

பிரிவு அலுவலர்
Personal Assistant to the Director
Commissioner of Adi Dravidar Welfare
Chepauk, Chennai-600 005.
10/3/14